செய்தி வெளியீடு எண். 759 நாள். 14.09.2008

செய்தி வெளியீடு

பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழ்நாடு திரைப்படப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட “ அண்ணா வாழ்கின்றார் “ என்ற குறும்படம் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து திரையரங்குகளிலும் மற்றும் தொலைக்காட்சிகளில் திரையிடுதல்

---

பேறறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழா **15.9.2008** அன்று தமிழ்நாடு முழுவதும் கொண்டாடப்படவுள்ளதையொட்டி, தமிழ்நாடு திரைப்படப்பிரிவின் மூலம் திரைப்பட இயக்குநர் திரு பி.அமிர்தம் அவர்களால் இயக்கப்பட்டதும், தேசிய குறும்பட விருது பெற்றதுமான “ அண்ணா வாழ்கின்றார் “ என்ற குறும்படம் **15.09.2008** அன்று தமிழ்நாட்டிலுள்ள அனைத்து திரையரங்குகளில் திரையிடப்படவுள்ளது. அதேபோல் சென்னைத் தொலைக்காட்சி உட்பட, அனைத்து தனியார் தொலைக்காட்சிகளிலும் **15.09.2008** திங்களன்று பின்வருமாறு ஒளிபரப்பப்படுகிறது :

| நாள் | நேரம் | தொலைக்காட்சி |
|---|---|---|
| **15.09.2008** | காலை **10.05** மணி | சென்னைத் தொலைக்காட்சி |
| **15.09.2008** | காலை **8 – 8.30** மணி | கலைஞர் தொலைக்காட்சி |
| **15.09.2008** | காலை **5 – 5.30** மணி | வின் தொலைக்காட்சி |

மேலும் **15.09.2008** முதல் அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் மூலம் (குறுந்தகடு) மாவட்டத்திலுள்ள பல்வேறு இடங்களில் ஒளிபரப்பவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

********

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9